1981 ஏப்ரல் 6]

அக்காமலையில் இருந்து வால்பாறைக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டம்.

*வினா எண் : 661—திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அக்காமலையிலிருந்து வால்பாறைக்குக் கொண்டுவரும் குடிநீர்த் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

(ஆ) நிதி எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) காரமலை தோட்டத்தின் மேல்புறம் நடுவர் ஆற்றை ஆதாரமாகக் கொண்டு வால்பாறை நகரியத்திற்குச் செயலாக்கப்படும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் 1981 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஏ. டி. கருப்பையா : தலைவர் அவர்களே, அக்கா மலை என்ற குறிஞ்சி மலையிலிருந்து, ஊசிமலை, கருமலை, வெள்ளமலை, பச்சைமலை வழியாக வால்பாறைக்குத் தண்ணீர் கொண்டுவரும் குழாய்கள், பஸ் ரூட்டிலே, பூமிக்கடியில் தோண்டப்பட்டு, புதைக்கப்பட்டு வருவதால், குறிஞ்சி மலையிலிருந்து வால்பாறைக்கு பஸ் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு, அந்தத் தண்ணீரை மிக வேகமாக, உடனடியாக, சுறுசுறுப்பாக, வால்பாறைக்குக் கொண்டு வருவதோடு, வால்பறையைச் சுற்றியிருக்கக் கூடிய கக்கன் காலனி, வாழைத் தோட்டம் எம். ஜி. ஆர். நகர், சிலோன் காலனி, பி.ஏ.பி. காலனி, காமராஜர் நகர் போன்ற பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க வேண்டும். அதோடு, வால்பாறையிலே, இருக்கிற, ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கிற மேல்நிலைப் பள்ளியிலே தண்ணீரே இல்லையென்பதை உணர்ந்து, அதோடு, அங்கே உள்ள மருத்துவமனையில் நோய்வாய்ப்பட்டிருக்கிற ஜனங்களுக்குத் தண்ணீரே இல்லை என்பதை உணர்ந்து, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, அமுல்படுத்தி, இந்த 1981 ஆம் ஆண்டுக்குள்ளேயே அந்த ஜனங்களுக்குத் தண்ணீர் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் வால்பாறை நகரியத்திற்குக் குடி தண்ணீர் கொடுப்பதைப் பற்றியது. இத்திட்டப் பணிகள் 1981 ஆம் வருட இறுதிக்குள் பூரணமாக முடிவு பெற்று வால்பாறை நகரிய மக்களுக்குப் பயன் தரத்தக்க அளவுக்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.